காண்டம், பாண்டியம், சாதி நொறுங்கல்
எளிதிங்கள் சீர் விபரம்.

1.

எளிதிங்கள் சீர் விபரம்.

ஆண் பெண் புருஷன் மனைவி இருவரும் பெண்ணின் தாய்தந்தையிடம் சென்று அய்யா நான் எளிதிங்கள் செய்து கொள்ளவேண்டும் என்று பெண் சொல்வாள் தாய்தந்தை இல்லாவிட்டால் தன் பிறந்தவர் ஆண் இருந்தால் பெண் அவர்களிடம் சொல்வாள். அதற்கு தாய் தந்தையர் சம்மதித்து அப்படியே செய்துகொள் என்று சந்தோசமாக சொல்வார்கள்.

பிறகு பஞ்சாங்கம் பார்த்து ஒரு நல்லநாள் குறிப்பிட்டு நாவிதனை அழைத்து உறவினர்களுக்கு சொல்லிவரச் சொல்வார்கள். நாவிதன் உறவினர்கள் இருக்கும் ஊர்களுக்கெல்லாம் சென்று சொல்லிவிட்டு வருவான். பிறகு எளிதிங்களுக்கு தேவையான அரிசி. பருப்பு. சர்க்கரை. பழம். தேங்காய் வெற்றிலைபாக்கு இவைகள் சேகரிப்பார் இந்த எளிதிங்கள் சீர் பெண்ணின் பிறந்த இடத்தில்தான் செய்வார்கள். வாசலில் நான்குமூங்கில் நட்டு மேலே சிறுமூங்கில் போட்டு தென்ன ஓலை போட்டு பந்தல் போடுவார்கள். அதே தென்னமட்டையில் படல்கட்டி பந்தலின் மூன்று பக்கம் அல்லியில் வைத்துக் கட்டுவார்கள். பிறகு நாவிதன் பாச்சான் கோல் ஆறடி நீளம்

மூன்று கிளையுள்ளதாக வெட்டி வருவான். அரசந்
தழையும் கொண்டு வருவான். எள்திங்கள் குறிப்பிட்
ட நாளில். உறவினர்கள் நண்பர்கள் எல்லோரும்
வந்து சேருவார்கள்.

## 1. முகூர்த்தக்கால் போடுதல்.

ஆண் அருமைக்காரர் நாவிதனைக் கூப்பிட்டு முகூர்த்தக்கால் நட்ட சாமானம் வாங்கி வரச்சொல்வார். நாவிதன் பெண் அருமைக் காரரிடம் சொல்லி. ஒரு தட்டத்தில் தேங் காய் பழம் வெற்றிலை பாக்கு நவதானியம் ஒருமங்கள் துணியில் முடிந்து வைப்பார் நிறைநாழி. நெய்க்கிண்ணம் இவைகள் எல் லாம் தட்டத்தில் வைத்து. சொம்பில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவார்கள். வாசலில் பந்தல் இருக்கும் இடத்தில் வலதுபுறம் பந்தக்காலின் முக்காலிபோட்டு அதன்மேல் வெள்ளைமாத்து விரித்து. கொண்டு வந்த சாமானத்தட்டத்தை அதன் மேல் வைப் பார்கள். வண்ணான் திவட்டி பந்தம் பிடிப்பான். ஆண் அருமைக்காரரும் மற்றும் இரு ஆண் களும் எழுந்து மூன்று பேரும் முகூர்த்தக்கால் கையில் பிடித்து நிற்பார்கள். பண்டாரம் சொம்புத் தண்ணீரை எடுத்து அருமைக் காரரிடம் கொடுப்பார். தண்ணீரை வாங்கி மூன்று முறை முகூர்த்தக்கால் மேல்.

ஊற்றுவார்கள். பிறகு பால் மூன்று முறை ஊற்றுவார்கள். பிறகு தண்ணீர் மூன்று முறை விடுவார்கள். நெருப்பில் நெய்போட்டு அருமைக்காரர் நவதானிய முடிப்பை எடுத்து தூபம் காட்டி முகூர்த்தக்காலில் கட்டுவார். பிறகு மூன்று பேரும் முகூர்த்தக்காலை எடுத்து பந்தக்காலுடன் சேர்த்து பனைநாரில் மூன்று கட்டு போடுவார்கள். பிறகு தேங்காய் உடைத்து வைத்து. தண்ணீர் சுற்றி நீர் விளாவி. நெருப்பில் நெய் போட்டு தூபம் காட்டி பூஜை செய்வார்கள். நிறைநாழியுடன் தட்டத்தை எடுத்து மூன்று முறை சுற்றுவார்கள். பிறகு நிறைநாழி நெல் தேங்காய் பழம் இவைகளை நாவிதனுக்கு கொடுப்பார்கள். பிறகு மெண்அருமைக்காரரும் நாவிதனும் மர உரலுக்கும். வண்டி நுகம் கொண்டுவந்து அந்த நுகத்துக்கும் - குழவிக்கல்லுக்கும். இந்த மூன்றுக்கும் நெய் அரப்பு தேய்த்து தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்து. வெள்ளை நூலில் மஞ்சள் பொடி கலந்து மஞ்சள் நூல் செய்து. விரலி மஞ்சள் நூலில் கட்டி மேலே சொன்ன மூன்றுக்கும் காப்புக் கட்டுவார்கள். பிறகு. முக்காலி போட்டு அதன் மேல் வெள்ளை மாத்து விரித்து அதன் முன் சாணியால் பிள்ளையார் பிடித்து வைப்பார்கள்.

பிள்ளையார் முன் நிறைநாழி தேங்காய் பழம்.
நெய்க்கிண்ணம் வைப்பார்கள். ஒருதட்டத்
தில் சாதம் போட்டு அதன் மேல் பழம் சர்க்
கரை வைத்து ஒருகிண்ணியில் தயிர் ஊற்றி
வண்ணானிடம் ஒருமாத்து வாங்கி சும்மாடு
இரண்டு செய்து சாதத்தை ஒருசும்மாட்
டின் மேல் தயிர்கிண்ணத்தை ஒரு சும்மாட்
டின் மேல் வைப்பார்கள்.

௨, எள்கீங்கள் செய்துக்கும் பெண்ணுக்கு
(அக்கை போட்டு தண்ணீர் வார்த்தல்,
வாசலில் ஒரு முக்காலி போட்டு பெரிய
பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து அருகில்
வைப்பார்கள் பிறகு ஒருதட்டத்தில் சாதம்
போட்டு சுண்ணாம்பு மஞ்சள் பொடி சாதத்
துடன் கலந்து செஞ்சாதம் செய்து கொண்டு
வந்து வைப்பார்கள். பிறகு பெண்ணின் அண்ண
ன் மனைவி தம்பி மனைவி இவர்கள் எள்கீங்கள்
செய்யும் பெண்ணை கூட்டி வந்து முக்காலி
மேல் கிழக்கு முகமாக உட்கார வைப்பார்
கள் பிறகு பெண் அருமைக்காரர் வந்து
கிண்ணத்தில் இருக்கும் நெய்யை விரலில்
தொட்டு பெண்ணின் தலையில் தேய்ப்பார்கள்
பிறகு அரப்புப் பொடி தேய்த்து தண்ணீர்
சாரிப் போட்டு மூன்று சொம்புதண்ணீர்

பெண்ணின் சிரசின் மேல் ஊற்றுவார்கள். பிறகு வெள்ளை சாதம் தட்டத்தில் வைத்து கரண்டி நெருப்பில் நெய் போட்டு பெண்ணின் முகத்துக்கு தூபம் காட்டுவார்கள். பிறகு சாதத்தை கீழே போட்டு விட்டு. அதே தட்டத்தில் தண்ணீர் ஊற்றி மூன்று முறை தண்ணீர் சுற்றிப் போடுவார்கள். மூன்று சொம்பு தண்ணீர் பெண்ணின் சிரசில் ஊற்றுவார்கள். பிறகு செஞ்சாதத்தை தட்டத்தில் வைத்து நெருப்பில் நெய் போட்டு பெண்ணின் முகத்திற்கு தூபம் காட்டி சாதத்தை எடுத்து பெண்ணின் சிரசை மூன்று முறை சுற்றி சாதத்தை கீழே போடுவார்கள். பிறகு தண்ணீர் சுற்றிப்போட்டு மூன்று சொம்பு தண்ணீர் ஊற்றுவார்கள். பிறகு ஆக்கை எடுத்து. ஆக்கை என்பது புளிய மரத்தின் சிறு குச்சி மூன்று. நாவிதன் ஆக்கை கொண்டு வந்து கொடுப்பான் பெண் அருமைக்காரர் அதை வாங்கி மற்றும் இரண்டு பெண்கள் துணையுடன். எளிதிங்கள் பெண்ணுக்கு மூன்று முறை தேங்கி. பிறகு பெண் முக்காலி மேல் உட்கார்ந்து ஆக்கையை கால் பெருவிரலில் மெட்டிக் கொள்ள வேண்டும். பிறகு கரும்புச் சக்கை மூன்று

உருண்டை பிடித்து பெண் அருமைக்காரர்
சர்க்கரையை எடுத்து பெண்ணின் இடதில் மூன்
று முறை சுற்றி நாவிதன் கையில் கொடுத்து
விடுவார்கள். பிறகு நிறைநாழியை எடுத்து
மூன்று முறை சுற்றி நாவிதனுக்கு கொடுப்பார்
கள் பிறகு நிறைய தண்ணீர் விட்டு பெண்ணை
நன்றாக குளிக்க வைத்து வேறு சேலை கட்டி
கூட்டி வருவார்கள். பண்டாரம் மலர்மாலை
கொண்டு வந்து கொடுப்பார். எளிதிங்கள் செய
து கொண்டும் பெண்ணுக்கு நெற்றியில் விபூதி
பூசி சந்தனப் பொட்டு வைத்து சிகப்பு வைத்
து கிழக்கு முகமாக வைத்து. ஆண் அருமை
க்காரர் மாலையை எடுத்து கிழக்கு முகமாக நின்
று சூரியனுக்கு ஓங்கி. பிறகு பெண்ணுக்கு ஓங்
கி பெண்ணின் கழுத்தில் போடுவார்கள் பிறகு
நுகத்தை தெற்கு வடக்காக போட்டு நுகத்தி
ற்கு பூக்கட்டி பெண்ணை கிழக்கு முகமாக
நுகத்தின் மேல் உட்கார வைப்பார்கள். நங்
கை அல்லது கொழுந்தி பெண்ணுக்கு துணை
யாக இருப்பார்கள். பிள்ளையார் முன் இரு
க்கும் தேங்காயை உடைத்து வைத்து.
ஆண் அருமைக்காரர் நெருப்பில் நெய்
போட்டு தண்ணீர் சுற்றி நீர் விளாவி பிள்ளை
யாருக்கு பூஜை செய்வார் பிறகு வெற்றிலை
எடுத்து இரண்டாக கிள்ளி கிண்ணியில்
இருக்கும் தயிரில் போட்டு பிறகு

தயிரில் கிடக்கும் வெற்றிலையை ஆண் அருமைக்காரர் எடுத்து முதலில் பிள்ளையாருக்கு மூன்று முறை அருமை எடுப்பார். பிறகு அந்த வெற்றிலையை வேறு கிண்ணியில் போட்டு விட்டு மறுபடியும் தயிரில் கிடக்கும் வெற்றிலையை எடுத்து பெண்ணுக்கு மூன்று முறை அருகு மணம் எடுப்பார். அருகுமணம் எடுப்பது எப்படி யென்றால் ஆண் அருமைக்காரர் தயிரில் இருக்கும் வெற்றிலையை எடுத்து இரண்டாக கிள்ளி இரண்டு கையிலும் பிடித்து பெண்ணின் முன் மூன்று முறை ஓங்குவார். பிறகு நெருப்பில் நெய் போட்டு பூஜை செய்வார். பிறகு நிறை நாழி நெல் தேங்காய் பழம் இவைகளை நாவிதனுக்கு கொடுப்பார்கள். பெண்ணின் கழுத்தில் இருக்கும் மாலையை எடுத்து பந்தலில் தொங்க விடுவார்கள். பிறகு எளிதீங்கள் பெண்ணுக்கும் துணைப் பெண் இருவர் மூவரையும் நடுகத்தின் மேல் உட்கார வைத்து பெண் அருமைக்காரர் சாதம் போடுவார். பிறகு உறவினர்கள் நண்பர்கள் எல்லோருக்கும் சாப்பாடு போடுவார்கள் மறுபடி வண்ணான் நாவிதன் எல்லோருக்கும் சாப்பாடு போட்டு விட்டு. பிறகு திருமண பாத்திரத்தில் உள்ளே அரசந்தழை போட்டு.

மஞ்சள் பொடி கலந்து மஞ்ச நூல் செய்து அதில்
விரளி மஞ்சள் கட்டி மண்பானைக்கு காப்புக்
கட்டி தினை அரிசி மாவு இடித்து தண்ணீர்
விட்டு பிசைந்து மாவின் நடுவில் பனங்கரு
ப்பட்டி ஒன்று வைத்து மாவை உருண்டை
யாக செய்து புது பானையில் கொஞ்சம்
தண்ணீர் விட்டு அதன் மேல் அரசங்குழை
போட்டு உருண்டையாக செய்த மாவை
எடுத்து உள்ளே வைத்து மண்பாத்திர
த்தை மூடி அடுப்பில் வைத்து பெண்ணி
ன் பிறந்தவன் ஒரே ஜாதி விறகால் சிறிது
நேரம் தீ எரிப்பார் உள்ளே இருக்கும்
மாவு நன்றாக வெந்து அப்படியே இரு
க்கும் பிறகு அப்படியே விட்டு விட்டு
எல்லோரும் அன்று இரவு தூங்குவா
ர்கள் மறுநாள் விடிந்ததும் நாவிதன்
வந்து எளிஞங்கள் பெண்ணும் துணைப்பெண்
ணையும் குளிக்கச் செய்து பிறகு பெண் அரு
மைக்காரர் குளிப்பார்கள் பிறகு நாவிதனும்
பெண் அருமைக்காரரும் மஞ்சள் நூலில் விர
ளிமஞ்சள் கட்டி குழவிக்கல்லுக்கும் காப்புக்
கட்டி விட்டு எளிஞங்கள் பெண்ணுக்கும் துணை
ப்பெண்ணுக்கும் நெற்றியில் விபூதி பூசி சந்த
னப் பொட்டு வைத்து புது சேலை கட்டி
தலைக்கு பூ வைத்து அலங்காரம் செய்வார்
கள்.

3. குழவி எடுத்தல்.

வாசலில் உள்ள பந்தலுக்குள் மரக்கூந்தாணி அதாவது மர உரல் இருக்கும் அந்த உரலுக்குள் குழவிக்கல்லை போட்டு வைப்பார்கள். பிறகு வீட்டின் உள்ளே நடுவீட்டில் முக்காலி போட்டு வைப்பார்கள். பிறகு எளிதீங்கள் பெண்ணும் துணைப்பெண்ணும் இருவரையும் ஜோடியாக நிறுத்தி நாவிதன் மர உரலை சாய்த்துப் பிடிப்பான். எளிதீங்கள் பெண் உரலின் உள்ளே இருக்கும் குழவிக் கல்லை எடுக்கணும். இரண்டு பெண்களும் ஜோடியாக புறப்பட்டு ஓட்டமாக சென்று வீட்டின் உள்ளே இருக்கும் முக்காலி மேல் உட்கார வேண்டும். இருவரில் யார் முதலில் உட்கார்ந்தார்களோ அவர்களுக்கு ஏதோ பரிசு கொடுப்பார்கள்.

4. கோதை பிடித்தல்.

மண்பாத்திரத்தில் இருக்கும் உருண்டை மாவை எடுத்து பேழை மூடியில் வைத்து வீட்டுக்கதவு நிழலின் மேல் வைப்பார்கள் பிறகு கோடாளிக்கு பூ வஸ்திரம் இது ஒரு துணி இவைகளை சுற்றி அலங்காரம் செய்து எளிதீங்கள் செய்யும் பெண். துணைப்பெண் அருமைக்காரப்பெண். மூன்று பேரும் கோடாலியை எடுத்து கோதை மாவின் நேர் இரண்டு

முறை தேங்கி மூன்றாவது மாலை இரண்டாக பிடுங்
து விடுவார்கள் உறவினர்கள் எல்லோரும் பிடுங்
கு மாலை பார்ப்பார்கள் ஏன் என்றால் மாலின்
உள்ளே இருந்து பனங் கருப்பட்டி கரையா
மல் இருந்தால் எளிசிங்கள் செய்து கொ
ள்ளும் பெண்ணின் குடும்பம் செல்வாக்காக
இருக்கும். கருப்பட்டி கரைந்து விட்டால்
பெண்ணின் குடும்பம் செல்வாக்கில்லாமல்
போய்விடும் என்பார்கள். பிறகு ஒரு தட்டத்
தில் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு. சூடம்
சாம்பிராணி வைத்து பண்டாரத்திடம்
கொடுப்பார்கள். எளிசிங்கள் பெண்ணை அழை
த்துக் கொண்டு பிள்ளையார் கோவிலுக்கு
செல்வார்கள் போகும் வழியில் உறவினர்
கள் பெண்ணுக்கு வெற்றிலை பாக்கில் பணம்
வைத்து இஷ்டப்பட்டவர்கள் கொடுப்பார்
கள் பெண் அதை கும்பிட்டு வாங்குவாள்
பிள்ளையார் கோவில் சென்றதும் பண்டாரம்
பூஜை செய்து எல்லோருக்கும் விபூதி
கொடுப்பார். பிறகு எல்லோரும் வீட்டுக்
கு வந்து சாப்பிட்டு விட்டு உறவினர்கள்
விடை பெற்று அவரவர்கள் ஊருக்குச்
செல்வார்கள்.

இந்த எளிசிங்கள் சீர். 1 கவுண்டர்
2 பண்டாரம். 3 கொங்கு நாவிதன் இந்த
மூன்று ஜாதிக்கும் முக்கியமாக நடக்கும்.